அஸ்வகாந்தா

1. வெட்டுப்புழு, அக்ரோடிஸ் வகை:

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் இளம் நாற்றுக்களை தாக்கும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள் சிவந்த நிறத் தலையுடன் கரும்பழுப்பு நிறத்தில் காணப்படும்
- அந்துப்பூச்சி பழுப்பு நிறத்திலும் முன்னிறக்கையில் கரும்புள்ளிகள் தோன்றும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை கையால் பொறுக்கி அழிக்கவும்
- வேப்பங்கொட்டை கரைசல் 5 சதவிதம் தெளிக்கவும்
- நச்சுப்பொறி வைத்து புழுக்களை கவர்ந்து அழிக்கலாம்

2. பழத் துளைப்பான்:

**சேதத்தின் அறிகுறி:**

- இளம்புழுக்கள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் இளம் இலைகளை உண்ணும்
- புழுக்கள் பழத்தினுள் துளைத்து உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- புழு பச்சை நிறமாகவும், சாம்பல்கலந்த பழுப்பு நிறக்கோடுகள் அதன் உடம்பில் காணப்படும்
- அந்துப்பூச்சி நடுத்தர உருவமாகவும், ‘V’ வடிவக் கோடுகள் மற்றும் இறக்கையின் ஓரங்களில் கருப்பு நிறத்தில் தோன்றும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- ட்ரைக்கோகிரம்மா கைலோனிஸ் 5 சி.சி / ஹெக்டேர்க்கு விடவும்
- பாஸில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் 0.5 கிலோ / ஹெக்டேர்
- என்.பி.வி 250 எல்.இ / ஹெக்டேர் எடுத்து தெளிக்கவும்
- இனக்கவர்ச்சிப்பொறி ஹெக்டேருக்கு 12 வைக்கவும்

**3. கத்தரிபுள்ளிவண்டு, ஹினோசெபிலேக்னா விஜின்சிஆக்டோபங்டேடா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளை சட்டகமாக்குதல்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழு, கூட்டுப்புழு, மற்றும் வண்டுகளை பொறுக்கி அழித்துவிடவும்
- கார்பரில் 2 கிராம் / லிட்டர்க்கு எடுத்து நனையும் கந்தகத்துடன் (2 கிராம் / லிட்டர்) கலந்து தெளிக்கவும்